சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS.22/2025**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02ம் நாள் திங்கட்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயபாலன் | தொழில் | இரயில்வே துறை ஓய்வு |
| தந்தை பெயர் | கண்ண கவுண்டர் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | காட்பாடி | வயது | 75 |

**02.02.2026 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.458/1964 வழக்கின் அசல் வழக்கு பதிவேடு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.எண்.458/1964 வழக்கின் இ.பி.எண்.126/1987 என்ற மனுவின் பிறப்பிக்கப்பட்ட சுவாதீன ரசீது நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.184/2018 வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.184/2018 வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.02.2022 தேதியிட்ட சி.வேலு என்பவர் 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.3905 கணினி பட்டா இணையதள நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.04.2023ம் தேதி 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த தானப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.4074 கணினி பட்டா இணையதள நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.07.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சல் ரசீது **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1 பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3 பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 4 பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 4ம் பிரதிவாதி வாதி வழக்கறிஞருக்கு

அனுப்பிய கடிதம் நகல் **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கான வழிகாட்டி மதிப்பு இணையதள நகல் **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.வாதியின் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டு) **வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.